புதிய சமூகக்கல்வி பயிற்சிகள்

(வினா - விடைகள்)

ஆண்டு 7

தரம்:

6

ஆக்கம்:
கமலா குணராசா B. A. (Cey.)

மீள்பார்வை:
க. குணராசா, B. A. Hons. (Cey.) M. A., S. L. A. S.

விற்பனையாளர்:
ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.

விலை: ரூ. 9-50

வினாத்தாள்: 1 **ஆண்டு: 7**

சமூகக்கல்வி

பகுதி: 1

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு விடைகள் தரப்பட்டுள்ளன. சரியானது அல்லது மிகச்சிறந்தது என நீர் கருதும் விடையின் கீழ்க் கீறிடுக.

1. அருகிலுள்ள வரைப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலை அமைந்துள்ள அமைவிடம்:
(1) நகரக் குடியிருப்பு
(2) கிராமக் குடியிருப்பு
(3) குளக் குடியிருப்பு
(4) தோட்டக் குடியிருப்பு



2. நீர்ப்பாசனத்தை அடிப்படையாகக் கொண்டு மக்கள் ஓரிடத்தில் குடியேறி வாழும்போது உருவாகும் குடியிருப்பு:
(1) சந்திக் குடியிருப்பு (2) குளக் குடியிருப்பு
(3) சந்தைக் குடியிருப்பு (4) துறைக் குடியிருப்பு எனப்படும்.

3. நாவாந்துறை, தங்காலை, பேசாலை, குச்சவெளி என்பன:
(1) தோட்டக் குடியிருப்புகள் (2) மீன்பிடிக் குடியிருப்புகள்
(3) வரலாற்றுக் குடியிருப்புகள் (4) சந்திக் குடியிருப்புகள்

4. மாகோ நகரம்:
(1) குளக் குடியிருப்பு (2) சந்திக் குடியிருப்பு
(3) கடவைக் குடியிருப்பு (4) துறைக் குடியிருப்பு ஆகும்.

5. துறைக் குடியிருப்புகள் பெரிதும்:
(1) குளக்கரைகளை அடுத்து (2) கடற்கரைகளை அடுத்து
(3) சந்தைகளை அடுத்து (4) நகரங்களை அடுத்து அமைந்திருக்கும்.

6. அருகிலுள்ள வரைபடத்தில் காணப்படும் கிராமம் ஒரு:
(1) குளக் குடியிருப்பு
(2) நகரக் குடியிருப்பு
(3) சந்திக் குடியிருப்பு
(4) மீன்பிடிக் குடியிருப்பு ஆகும்.



7. அருகிலுள்ள படத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வண்டில் பாதை செல்லும் திசை:
(1) வடமேற்கு
(2) தென்கிழக்கு
(3) மேற்கு
(4) தென்மேற்கு ஆகும்.



8. அருகிலுள்ள படத்தில் காணப் படும் கிறிஸ்தவ ஆலயத்திற்கு எத்திசையில் பாடசாலை அமைந் துள்ளது?
(1) வடகிழக்கில்
(2) மேற்கில்
(3) தென்மேற்கில்
(4) தென்கிழக்கில்



9. வினா 8இல் காணப்படும் படத்தில் பிரதான வீதியில் இருந்து வண்டில் பாதை பிரிந்து செல்லும் திசை?
(1) தெற்கு (2) வடகிழக்கு (3) தென் கிழக்கு (4) கிழக்கு

10. வினா 8இல் பாடசாலைக்கு எத்திசையில் குளம் அமைந்துள்ளது?
(1) கிழக்கில் (2) தென்கிழக்கில் (3) தென்மேற்கில் (4) மேற்கில்

11. சூரியன் உதிக்கும் திசையைப் பார்த்துக்கொண்டு நின்றபடி கைகள் இரண்டையும் உங்கள் தோள் மட்டத்திற்கு நீட்டும்போது உங்கள் வலது கரம் சுட்டும் திசை:
(1) தெற்கு (2) வடக்கு (3) மேற்கு (4) வடகிழக்கு

12. நிர்வாகப் பிரிவுகளில் வவுனியாப் பிரதேசம்:
(1) ஒரு மாவட்டம் (2) மாகாணம் (3) உதவி அரசாங்க அதிபர் பிரிவு (4) திசாவை

13. இலங்கையின் மாகாணப் பிரிவுகள்:
(1) 24 (2) 18 (3) 9 (4) 16

14. மன்னார் மாவட்டம்:
(1) வடமத்திய மாகாணத்தை (2) வடமேல் மாகாணத்தை
(3) வட மாகாணத்தை (4) கீழ் மாகாணத்தைச் சேர்ந்ததாகும்

15. திருகோணமலை மாவட்டம், மட்டக்களப்பு மாவட்டம், அம்பாறை மாவட்டம் என்பன சேர்ந்தே:
(1) மேல் மாகாணம் (2) ஊவா மாகாணம்
(3) கீழ் மாகாணம் (4) வட மாகாணம் எனப்படும்

16. இலங்கையின் மாவட்டப் பிரிவுகள்:
(1) 9 (2) 18 (3) 25 (4) 24 ஆகும்

17. கொழும்பு மாவட்டம் அமைந்திருப்பது:
(1) தென் மாகாணத்தில் (2) மேல் மாகாணத்தில்
(3) கீழ் மாகாணத்தில் (4) மத்திய மாகாணத்தில்

18. ஒவ்வொரு மாவட்டத்தினதும் பொது நிர்வாகத்தை நடத்துபவர்:
(1) கிராம சேவகர் (2) காரியாதிகாரி (3) அரசாங்க அதிபர் (4) மணியக்காரர்

19. சில கிராமங்களை நிருவகிப்பதற்காக அமைக்கப்படும் உள்ளூராட்சி மன்ற அமைப்பு:
(1) நகர சபை (2) கிராமோதய சபை (3) கிராம சபை (4) மாநகர சபை எனப்படும்.

20. யாழ்ப்பாண நகரத்தை நிருவகிக்கும் உள்ளூராட்சி மன்றம்:
(1) நகர சபை (2) பட்டின சபை (3) மாநகர சபை (4) கிராம சபை ஆகும்.

21. கிளிநொச்சி உள்ளூராட்சி மன்றம் ஒரு:
(1) பட்டினசபை (2) நகரசபை (3) மாநகரசபை (4) கிராமசபை ஆகும்.

22. இலங்கையில் கடைசியாக உருவாக்கப்பட்ட மாவட்டம்:
(1) கிளிநொச்சி (2) அம்பாறை (3) முல்லைத்தீவு (4) கம்பகா

23. அருகிலுள்ள படத்தில் பாடசாலைக்கு வடமேற்கே அமைந்து இருப்பது:

(1) சந்தை

(2) கோயில்

(3) தபாற்கந்தோர்

(4) குளம்



பகுதி: 2

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. (i) உங்கள் பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் எது?
   (ii) உங்கள் ஊரின் அரசாங்க அதிபர் யார்?
   (iii) உங்கள் ஊர் எந்தத் தேர்தல் தொகுதியைச் சேர்ந்தது?

2. (i) உங்கள் ஊரில் காணப்படும் வரலாற்று முக்கியம் வாய்ந்த கட்டிடங்கள் எவை?
   (ii) அவை உங்கள் பாடசாலையிலிருந்து எத்திசைகளில் அமைந்துள்ளன?

3. (i) இலங்கையின் மாகாணப் பிரிவுகள் எவை?
   (ii) இலங்கை எத்தனை மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது?

வினாத்தாள்: 2

ஆண்டு: 7

சமூகக்கல்வி

பகுதி: 1

மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதன் கீழ்க் கீறிடுக.

1. நான்கு புறங்களும் நீரால் சூழப்பட்ட நிலப்பரப்பு:
   (1) குடாநாடு (2) தீவு (3) நாடு (4) கண்டம் எனப்படும்.

2. இலங்கையின் நிலப்பரப்பு:
   (1) 63,660 ச. கி. மீ. (2) 65,840 ச. கி. மீ.
   (3) 65,610 ச. கி. மீ. (4) 62,380 ச. கி. மீ.

3. அருகிலுள்ள வரைப் படத்தில் இலங்கைக்கு அண்மையிலுள்ள நாடு (..................) எனக் காட்டப்பட்டுள்ளது. அதன் பெயர்:
   (1) பாகிஸ்தான் (2) பர்மா
   (3) இந்தியா (4) நயினாதீவு



4. இலங்கையை இந்தியாவிலிருந்து பிரிப்பது:
   (1) மன்னார்க் குடா (2) இந்துசமுத்திரம்
   (3) பாக்கு நீரிணை (4) வங்காள விரிகுடா

5. இலங்கைக்கு எத்திசையில் இந்தியா அமைந்துள்ளது?
(1) வடமேற்கு (2) தென் கிழக்கு (3) கிழக்கு (4) வடக்கு

6. பூமியில் காணப்படும் உயர்ந்த பகுதிகள்:
(1) சமவெளிகள் (2) பள்ளத்தாக்குகள் (3) மலைகள் (4) கரையோரம் எனப்படும்

7. இலங்கையின் தாழ் நிலம் என்று அழைக்கப்படுவது:
(1) 100 அடிக்குக் கீழ்ப்பட்ட இடம். (2) 3000 அடிக்குக் கீழ்ப்பட்ட நிலம்.
(3) 500 அடிக்குக் கீழ்ப்பட்ட நிலம். (4) 1000 அடிக்குக் கீழ்ப்பட்ட நிலம்.

8. இலங்கையின் மிக உயர்ந்த மலைச்சிகரம்:
(1) சிவனொளிபாதமலை (2) பீதுறுதாலகால
(3) கிரிகாலப்பொத்தை (4) நமுனகுல

9. நதிகள் உற்பத்தியாவது:
(1) சமவெளிகளில் (2) கரையோரத்தில்
(3) மலைப்பிரதேசத்தில் (4) தாழ்நிலத்தில்

10. அருகிலுள்ள வரைப்படத்தில் நிழல்படுத்திக் காட்டப்பட்டிருக்கும் பிரதேசம்:
(1) கடற்கரைச் சமவெளி (2) மத்திய மலைநாடு
(3) தாழ்நிலம் (4) பள்ளத்தாக்கு

11. இலங்கையின் மலைநாடு:
(1) 1000 அடிக்கு (2) 500 அடிக்கு
(3) 5000 அடிக்கு (4) 100 அடிக்கு மேற்பட்டது.

12. மத்திய மலைநாட்டிலுள்ள மலைகள்:
(1) சிகிரியா, கோவிந்தமலை, மிகிந்தலை, குருணாகல்
(2) பேதுறுதாலகால, கிரிகாலப்பொத்த, நமுனகுல, சிவனொளிபாதம்
(3) கதிர்காமம், யாப்பகூவ, ரிட்டிகலை
(4) பத்தலகலை, திம்புலாகலை, நமுனகுல, ரிட்டிகலை

13. இலங்கையில் மிக நீளமான நதி:
(1) களனிகங்கை (2) தெதுறுஓயா (3) மகாவலிகங்கை (4) மாணிக்ககங்கை

14. நான்கு பக்கங்களும் நிலத்தால் சூழப்பட்டிருப்பது:
(1) குடா (2) ஏரி (3) விரிகுடா (4) அளப்பு

15. மூன்று பக்கங்களும் கடலால் சூழப்பட்டிருப்பது:
(1) குடா நாடு (2) குடா (3) தீவு (4) அளம்

16. மகாவலிகங்கையின் கழிமுகம் காணப்படுவது:
(1) திருகோணமலையில் (2) மட்டக்களப்பில் (3) முல்லைத்தீவில் (4) மத்திய மலைநாட்டில்

17. இலங்கையின் மேட்டு நிலங்கள்:
(1) கதிர்காமக் குன்று, சிகிரியா, சிவனொளி, யாப்பகூவ
(2) கற்றன், வெலிமடை, கண்டி, கொஸ்லாந்தை
(3) குருணாகல், கண்டி, கதிர்காமம், சிகிரியா
(4) சிகிரியா, பிறேயஸ்கூட், இங்கினியகலை

18. சிவனொளிபாதமலையின் மறு பெயர்:
(1) சமனலை (2) நமுனகுல (3) திம்புலாகல (4) ரிட்டிகலை

19. இலங்கையில் அதி உயரமில்லாத சிறு குன்றுகளை
(1) மொனட்டுறெக்குப்பாறை (2) டெல்ரா (3) மேட்டு நிலம் (4) மலைநாடு
என அழைப்பர்.

20. ஹற்றன் மேட்டு நிலத்தின் மறுபெயர்.
(1) மொனட்டுறெக்கு (2) தொப்பித் தோட்டம் (3) டெல்ரா (4) சமனல

பகுதி: 2

சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1. பிள்ளைகளே உங்கள் ஊர் இலங்கையின் எத்தரைத் தோற்றப் பிரிவில் அமைந்து இருக்கின்றது? மத்திய மலைநாட்டின் தென் மேற் சமவெளியிலா? தென்கீழ் சமவெளியிலா? வடசமவெளியிலா?
2. இலங்கையின் தரைத் தோற்றத்தின் இரு பெரும் பிரிவுகள் எவை?
3. மத்திய மலைநாடு எத்தனை அடி உயரத்திற்கு மேற்பட்ட பகுதி?
4. மொனட்டுறெக்குப் பாறைகள் என்றால் என்ன? அவற்றிற்கு உதாரணந் தருக.
5. மேட்டு நிலம் என்றால் என்ன? அவற்றிற்கு உதாரணம் தருக.
6. இலங்கையில் காணப்படும் குடாக்கள் எவை?
7. இலங்கையில் காணப்படும் துறைமுகங்கள் எவை?
8. முனையென்றால் என்ன? உதாரணம் தருக.
9. இலங்கையில் காணப்படும் களப்புக்கள் எவை?
10. இலங்கையில் காணப்படும் ஆறுகளின் எண்ணிக்கை யாது? நீளமான ஆறு யாது?

வினாத்தாள்: 3 **ஆண்டு: 7**

சமூகக்கல்வி

பகுதி: 1

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பட்டிருக்கும் விடைகளுள் சரியானது அல்லது மிகவும் பொருத்தமானது என நீர் கருதும் விடையின் கீழ்க் கோடிடுக.

1. ஒரு குறுகிய கால அளவில் வெப்பநிலை, மழைவீழ்ச்சி, காற்றுத்திசை வளியின் ஈரப்பதன் என்பவற்றில் வளிமண்டலத்திலே நிலவும் நிலைமை
(1) காலநிலை (2) வானிலை (3) மேற்காவுகை மழை (4) சூறாவளி

2. ஒரு நாட்டின் காலநிலையை அறிவதற்கு நீண்ட காலமாகப் பதிவு செய்யப்பட்டு வரும் பின்வருவனவற்றுள் எது உதவும்:
(1) வெப்பநிலை (2) மழை வீழ்ச்சி
(3) வெப்பநிலையும் ஈரலிப்பும் (4) வெப்பநிலை மழைவீழ்ச்சி ஈரலிப்பு என்பன.

3. மழைவீழ்ச்சியை அளவிடும் கருவி:
(1) மழைமானி (2) வெப்பமானி (3) திசையறிகருவி (4) எக்கோசவுண்டர்

4. இலங்கைக்கு அதிக மழையைத் தரும் காற்று:
(1) வடகீழ்ப் பருவக்காற்று (2) கொண்டற்காற்று
(3) தென்மேல் பருவக்காற்று (4) சூறுவளி

5. யாழ்ப்பாணக் குடாநாடு பெரும்பாலும் மழையைப் பெறுவது:
(1) மேற்காவுகைமூலம் (2) வடகீழ்ப் பருவக்காற்றுமூலம்
(3) தென்மேல் பருவக்காற்றுமூலம் (4) சூறுவளி

6. இலங்கையின் ஆண்டுச் சராசரி வெப்ப நிலை:
(1) 70°ப — 72°ப (2) 75°ப — 77°ப (3) 80°ப — 82°ப (4) 90°ப — 92°ப

7. தென்மேற் பிரதேசங்களில் ஆண்டொன்றிற்கான மழைவீழ்ச்சி:
(1) 1905 மி. மீ. (2) 1700 மி. மீ. (3) 1802 மி. மீ. (4) 1931 மி. மீ.

8. இலங்கையில் பொதுவாக மாலைநேரங்களில் பெய்யும் மழை:
(1) தென்மேற் பருவக்காற்று மழை (2) மேற்காவுகை மழை
(3) வடகீழ்ப் பருவக்காற்று மழை (4) சூறுவளி மழை

9. சமவெளியின் வெப்பநிலையிலும் மலைப்பிரதேசங்களில் வெப்பநிலை குறைவு. ஒவ்வொரு 300 அடி உயரத்திற்கும் குறையும் வெப்பநிலை அளவு:
(1) 1°ப (2) 3°ப (3) 2°ப (4) 4°ப

10. வடகீழ் பருவக்காற்று வீசும் காலம்:
(1) மே முதல் செப்டம்பர் மாதம் வரை (2) மார்ச் முதல் ஏப்ரல் மாதம் வரை
(3) ஜனவரி முதல் ஏப்ரல் மாதம் வரை (4) நவம்பர் முதல் ஜனவரி மாதம் வரை

11. இலங்கையின் ஈரவலயம் அமைந்துள்ள இடம்:
(1) வடபிரதேசம் (2) வடகீழ்பபிரதேசம்
(3) கிழக்குப் பிரதேசம் (4) தென்மேற்குப் பிரதேசம்

12. இலங்கையின் ஈரவலயத்திற்கும் பெரும்பாலும்:
(1) 3 மாதங்களுக்கு மழை கிடைக்கிறது. (2) 6 மாதங்களுக்கு மழை கிடைக்கிறது.
(3) 9 மாதங்களுக்கு மழை கிடைக்கிறது. (4) வருடம் முழுவதும் மழை கிடைக்கிறது.

13. 

இப்படம் ஒருநாளில் காணப்பட்ட வானிலையைக் காட்டுகிறது. அந்நாளில் காணப்படும் வானிலைத் தன்மைகளாவன:
(1) மழை, மழைமுகில், கடுங்காற்று (2) மழை, திரள்முகில், இடியும் மின்னலும்
(3) மழை, முகில், வெப்பம் (4) மழை, காற்று, வெப்பம்

14. 

இப்படம் குறிக்கும் வானிலை:
(1) தூறல், காற்று, திரள்முகில் (2) மழை, முகில், காற்று
(3) தூறல், திரள்முகில், காற்று (4) மழை, மழைமுகில், காற்று

15. 

இப்படம் குறிக்கும் வானிலை:
(1) உயர்முகில், தெளிவற்ற வானம் (2) முகில், வெப்பம்
(3) தெளிவான வானம், உயர்முகில் (4) வெப்பம், முகில், மழை

பகுதி: 2

எல்லா வினுக்களுக்கும் விடை தருக:

1. இலங்கையின் இருபெரும் காலநிலை வலயங்கள் எவை?
2. உமது மாவட்டம் எவ் வலயத்தில் அமைந்துள்ளது?
3. உமது மாவட்டம் எக்காற்று மூலம் மழையைப் பெறுகிறது?
4. உமது மாவட்டம் மழை பெறும் மாதங்கள் எவை?
5. இலங்கைக்கு எவற்றின் மூலம் மழை கிடைக்கின்றது?
6. இலங்கை பெறும் மழைவீழ்ச்சி வகைகள் யாவை? அவற்றில் ஒன்றினைச் சுருக்கமாக விபரிக்க:
7. வானிலை என்றால் என்ன?
8. காலநிலை என்றால் என்ன?
9. வளியின் ஈரப்பதன் என்றால் என்ன?
10. வானிலை நிலைமைகளைக் குறிக்கும் பின்வரும் குறியீடுகளை அவதானிக்கவும்:



மழை | கருமுகில் பரந்த வானம் | ஓரளவு தெளிவான வானம் | தெளிவான வானம் | இடி மின்னற் புயல் | வெப்பநிலை அளவு | காற்று வீசும் திசை

நான்கு பிரதேசங்களில் ஒருநாள் நிலவிய வானிலை நிலைமைகள், ஒவ்வொரு சதுரத்தின் கீழும் தரப்பட்டுள்ளன. அந்த வானிலை நிலைமைகளை வானிலைக் குறியீடுகளாக அந்த சதுரங்களுள் குறிக்க:

1.

மழை; கருமுகில் பரந்தவானம்;
வெபபநிலை 78° ப.; தென்மேல் காற்று

2.

தெளிவான வானம்; 80° ப. வெப்பநிலை;
வடகீழ்க் காற்று.

3.

இடிமின்னற் புயல்; மழை; கருமுகில் பரந்த
வானம்; 79°ப. வெப்பநிலை; தென்கீழ் காற்று

4.

ஓரளவு தெளிவான வானம்; மழை; 78°ப.; வெப்ப
நிலை; வடகீழ் காற்று.

வினுத்தாள்: 4 **ஆண்டு: 7**

சமூகக்கல்வி

பகுதி: 1

பின்வரும் வினுக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு விடைகள் தரப்பட்டுள்ளன; சரியானது அல்லது மிகச்சிறந்தது என நீர் கருதும் விடையின் கீழ்க் கீறிடுக.

1. பின்வருவனவற்றுள் இயற்கை வளம் அல்லாதது ;
   (1) மண் (2) நீர் (3) காரியம் (4) வீதி

2. இயற்கை வளத்திற்கு ஒரு உதாரணம் ;
   (1) நெல் (2) புகையிலை (3) மலைவேம்பு (4) றப்பர்

3. கமக்காரர் எந்த இயற்கை வளத்துடன் தொடர்புடைய தொழிலைச் செய்கின்றனர் ;
   (1) நெல் (2) காய்கறி (3) மண் (4) உரவகை

4. மழைவீழ்ச்சியில் தங்கியிருக்கும் நெற்பயிர்ச் செய்கைக்கு உதவும் முக்கிய இயற்கை வளம் ;
   (1) நீர் (2) மண் (3) சுண்ணக்கல் (4) உரம்

5. தோட்டச் செய்கைக்கு உகந்த மண் ;
   (1) மணல் (2) களிமண் (3) செம்மண் (4) வண்டல்மண்

6. நெற் செய்கைக்கு உகந்த மண் ;
   (1) மணல் (2) உலர்மண் (3) செம்மண் (4) வண்டல்மண்

7. மண்ணரிப்பைத் தடுப்பதற்குப் பின்பற்றப்படும் ஒரு முறை ;
   (1) மலைச்சரிவுகளைத் துப்பரவாக்கல் (2) மிருகங்களை மேயவிடுதல்
   (3) மலைச் சரிவுகளில் செடிகள் வளர்த்தலும் வடிகால்களை அமைத்தலும்
   (4) சேனைப் பயிர்ச் செய்கைக்கு ஊக்குவித்தல்

8. களி மண்ணில் ;
   (1) நீர் தேங்காது ஓடிவடிந்துவிடும் (2) மெதுவாகவே உட்செல்லும்
   (3) நீர் உட்செல்லாது (4) நீர் கலக்காது

9. ஒரு முறை பயன்படுத்திய பின்னர் மீளப்பெற முடியாத வளம் ;
   (1) நீர் (2) மரங்கள் (3) விலங்குகள் (4) நிலக்கரி

10. மண்ணரிப்பு அதிகமாக நடைபெறுவது ;
    (1) மலைச் சரிவுகளில் (2) கரையோரங்களில்
    (2) ஆற்றங்கரைகளில் (4) வயல் வெளிகளில்

11. மண்பாதுகாப்புக்கு எடுக்கக்கூடிய சிறந்த ஒரு நடவடிக்கை ;
    (1) கூடிய உரம் பாவித்தல் (2) சுழல் முறைப் பயிர்ச்செய்கை
    (3) சேனைப் பயிர்ச் செய்கை (4) மீளவும் வளமாக்கல்

12. யாழ்ப்பாணக் குடா நாட்டில் தோட்டச் செய்கைக்கு உபயோகப்படுத்தப்படும் நீர் ;
    (1) கிணற்றுநீர் (2) ஆற்றுநீர் (3) குளத்துநீர் (4) மழைநீர்

13. உப்பு எடுக்க உதவும் நீர்:
    (1) மழைநீர் (2) நன்னீர் (3) கடல்நீர் (4) குளத்துநீர்

14. காடழிப்பினால் ஏற்படக்கூடிய ஒரு தீங்கு :
(1) பயிர்களை நாசம் விளைவிக்கக் கூடிய கிருமிகளின் பரம்பல்
(2) மலேரியாக் காய்ச்சல் (3) மண்ணரிப்பு
(4) சேனைப் பயிர்ச் செய்கையின் பரம்பல்

15. வில்பத்துப் பிரதேசம் ஒரு :
(1) அதிவறள் பிரதேசம் (2) மேட்டுநிலம் (3) புல்வெளி (4) புகலரண்

16. நாம் நமது காடுகளிலிருந்து பெற்றுள்ள மிக முக்கியமான பயன் :
(1) மருந்துப் பூண்டுகள் (2) நாணல் கொடி வகைகள் (3) விறகு (4) மரங்கள்

17. புகலரண்கள் அமைக்கப்பட்டதன் பிரதான நோக்கம் :
(1) நாட்டுக்குத் தேவையான விறகைப் பெறுவதற்கு
(2) வனவிலங்குகளையும் பறவைகளையும் பாதுகாப்பதற்கு
(3) உல்லாசப் பயணிகளைக் கவர்வதற்கு (4) வேட்டை ஆடுவதற்கு

18. பின்வருவனவற்றுள் காட்டுவளமாக விளங்குவன :
(1) வேம்பு, பாலை, முதிரை, சப்பு (2) பனை, மா, பலா, கமுகு
(3) தென்னை, கரும்பு, வாழை, கமுகு (4) மரமுந்திரிகை, தோடை, அன்னுசி, எலுமிச்சை

19. இலங்கையின் மலைச் சரிவுகளிலுள்ள காடுகள் அழிக்கப்படுவதால் ஏற்படும் பிரதான நட்டம் :
(1) மருந்துச் செடிகள் அழிவுறும் (2) காட்டு மிருகங்கள் அழிவுறும்
(3) மண்ணரிப்பு ஏற்படும் (4) அப்பகுதியின் அழகு கெட்டுவிடும்

20. நீரைத் தேக்கி வைத்திருக்கக் கூடிய மண்வகை :
(1) களிமண் (2) மணல் (3) செம்மண் (4) உவர்மண்

21. இன்று இலங்கையில் காணப்படும் மிகப்பெரிய புகலரண் :
(1) வீரவில (2) குமண (3) யால (4) வில்பத்து

22. பின்வருவன இலங்கையிலுள்ள கனிப்பொருட்கள் :
(1) நிலக்கரி, செம்பு, காரீயம், இரும்புத்தாது (2) நிலக்கரி, தங்கம், வைரம், உப்பு
(3) காரீயம், வைரம், இல்மனையிட், படிக மணல் (4) உப்பு, வெள்ளி, காரீயம், படிகமணல்

23. சுண்ணாம்புக்கல் காணப்படும் பிரதான பகுதி :
(1) காலி (2) யாழ்ப்பாணக் குடாநாடு (3) புத்தளம் (4) மட்டக்களப்பு

24. சீமேந்து, கண்ணாடி, பென்சில் ஆகியவற்றைத் தயாரிப்பதற்குத் தேவையான கனிப் பொருள்களைச் சரியான ஒழுங்கு முறையில் காட்டும் தொகுதி :
(1) களிமண், இல்மனையிட், வெள்ளி (2) சுண்ணக்கல், படிகமணல், காரீயம்
(3) படிகமணல், சுண்ணக்கல், காரீயம் (4) காரீயம், படிகமணல், சுண்ணக்கல்

25. இல்மனையிட் சுத்திகரிப்புச் செய்யப்படும் தொழிற்சாலை உள்ள இடம் :
(1) திருக்கோயில் (2) புல்மோட்டை (3) காலி (4) நீர்கொழும்பு

26. இன்று இலங்கைக்கு அதிக வருவாய் தரும் கனிப்பொருள் :
(1) காரீயம் (2) இல்மனையிட் (3) மாணிக்கக்கல் (4) இரும்புத்தாது

27. யாழ்ப்பாணக் குடாநாட்டில் காணப்படும் ஒரு கனிப்பொருள் வளம் இன்னமும் பயன்படுத்தப் படாமல் உள்ளது அது :
(1) களிமண் (3) படிகமணல் (3) இம்மனைட் (4) சுண்ணக்கல்

28. யாழ்ப்பாணக் குடாநாட்டில் பின்வருவனவற்றுள் எது உற்பத்திக்குச் சிறந்த முறையில் பயன் படுத்தப்படுகிறது?
(1) படிகமணல் (2) காரீயம் (3) சுண்ணக்கல் (4) பனை

29. காரீயத்தின் உபயோகம்:
(1) பென்சில் செய்வதற்கு (2) பேனை மை செய்வதற்கு
(3) சட்டி பானை செய்வதற்கு (4) புகைப்படச் சுருள் செய்வதற்கு

30. பீங்கான் பொருட்கள் செய்வதற்கு உதவும் கனிப்பொருள்:
(1) படிகமணல் (2) காரீயம் (3) இல்மனைட் (4) வெண்களி

31. இலங்கையின் பிரதான உப்பளம்:
(1) ஆனையிறவு (2) செம்மணி (3) புத்தளம் (4) பாலாவி

32. பத்தனை என்பது:
(1) ஈரப் பருவக் காற்றுக்காடு (2) வறள் நிலவளரி (3) ஒரு புல்வெளி (4) மலைக்காடு

33. வரண்ட பிரதேசக் காட்டு மரங்கள்:
(1) தளப்பத்து, கித்துள், பலா, மலைவேம்பு (2) பாலை, முதிரை, யாவறணை, கருங்காலி
(3) சப்பு, தம்ரோ, மாகிறியா, கினை (4) நாகதாளி, ஆனைமுள்வி, காம்பை, வீரை

34. திருக்கோயிலில் காணப்படும் கனிப் பொருள்:
(1) உப்பு (2) படிகமணல் (3) இல்மனைட் (4) வெண்களி

35. நீர்வீழ்ச்சியிலிருந்து உற்பத்தி செய்யக்கூடிய சக்தி:
(1) அணுசக்தி (2) மின்சக்தி (3) நீராவி (4) வெப்பம்

பகுதி: 2

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. காட்டு வளங்களிலிருந்து எமது நாடு பெறும் பயன்கள் ஐந்தினைக் கூறுக.

2. மண் பாதுகாப்புக்குரிய நடவடிக்கைகள் மூன்றினைக் கூறுக.

3. (i) இலங்கையின் கனிப் பொருள்கள் எவை?
(ii) அவற்றில் ஏதாவது மூன்றினைப் பயன்படுத்தி இலங்கையில் நடைபெறும் தொழில்கள் யாவை?

4. (i) மண் எதிலிருந்து உருவாகின்றது?
(ii) உமக்குத் தெரிந்த மண் வகைகள் நான்கினைக் கூறுக.
(iii) மணலில் தாவரம் ஏன் வளரவில்லை?

5. (i) உப்புச் செய்கைக்குத் தேவையான நிலைமைகள் யாவை?
(ii) இலங்கையில் உப்புச் செய்கை நடைபெறும் இடங்கள் மூன்றினைக் கூறுக.
(iii) பரந்தனில் இரசாயனத் தொழிற்சாலை ஏன் அமைந்துள்ளது?

6. (i) காட்டுவளம் அழிவுறுவதால் ஏற்படும் தீமைகள் நான்கினைக் கூறுக.
(ii) இலங்கையிலுள்ள நான்கு வகையான காடுகள் யாவை?

விநுத்தாள்: 5 ஆண்டு: 7

சமூகக்கல்வி

பகுதி: 1

பின்வரும் வினுக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு விடைகள் தரப்பட்டுள்ளன. சரியானது அல்லது மிகச்சிறந்தது என நீர் கருதும் விடையின் கீழ்க் கீறிடுக.

1. இன்று நாட்டிற்கு அதிக வருவாயை பெற்றுத் தரும் பயிர்:
(1) தேயிலை (2) றப்பர் (3) நெல் (4) தென்னை

2. இலங்கையில் சேனைச் செய்கை நடைபெறும் பிரதேசம்:
(1) யாழ்ப்பாணக் குடாநாடு (2) ஈரவலயம் (3) மலைநாடு (4) உலர்வலயத் தாழ் நிலம்

3. மலைநாட்டில் படிக்கட்டுகள் அமைத்துப் பயிரிடப்படும் பயிர்:
(1) நெல் (2) தேயிலை (3) றப்பர் (4) உருளைக்கிழங்கு

4. இலங்கையின் ஈரவலயக் கடற்கரையில் நடைபெருத ஒரு தொழில்:
(1) மீன்பிடித்தல் (2) வர்த்தகம் (3) உப்புவிளைவித்தல் (4) கப்பற் போக்கு வரத்து

5. இலங்கையில் தென்னை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம்:
(1) பேராதனை (2) லுனுவில (3) மகாஇலுப்பள்ளம் (4) திருநெல்வேலி

6. ஒப்பந்த முறையில் இலங்கை றப்பரை வாங்கும் நாடு:
(1) பிரித்தானியா (2) கனடா (3) சீனு (4) அமெரிக்கா

7. விவசாயிகளிடமிருந்து உத்தரவாத விலைக்கு அரசாங்கம் கொள்வனவு செய்யும் பொருள்:
(1) காய்கறி (2) மிளகாய் (3) நெல் (4) பழங்கள்

8. உணவுப் பயிராகவும், வர்த்தகப் பயிராகவும் விளங்குவது:
(1) தேயிலை (2) தென்னை (3) புகையிலை (4) றப்பர்

9. யாழ்ப்பாணத்தில் விளைவிக்கப்படும் ஒரு முக்கிய வர்த்தகப் பயிர்:
(1) மிளகாய் (2) வாழை (3) வெங்காயம் (4) புகையிலை

10. நெற் செய்கைக்குத் தேவையானவை:
(1) ஒரு பருவ மழை, ஒரு பருவ அதிக வரட்சி
(2) அதிக நீர், வண்டல் மண், 75° ப. வெப்பநிலை
(3) மழை, மணல், உரம்
(4) நீர், வண்டல் மண், தொழிலாளர்

11. வரண்ட பிரதேச நெற்செய்கைக்கு உதவுவதும்:
(1) கிணறுகள் (2) நதிகள் (3) நீர்ப்பாசனக் குளங்கள் (4) கால்வாய்கள்

12. இலங்கையில் தேயிலை விளைவிக்கப்படும் பகுதிகள்:
(1) யாழ்ப்பாணம், வவுனியா, அம்பாறை (2) கொழும்பு, காலி, ஆனைமிறவு
(3) கண்டி, நுவரெலியா, கற்றன் (4) மாத்தளை, குருநாகல், புத்தளம்

13. றப்பர் பயிராகும் பிரதான மாவட்டம்:
(1) கேகாலை (2) நுவரெலியா (3) அம்பாறை (4) குருநாகல்

14. வினுகிரி தயாரிக்க உதவும் மூலப்பொருள் :
(1) தேயிலை (2) றப்பர் பால் (3) தென்னங்கள் (4) தேங்காய்

15. இலங்கையில் பயிரிடப்படாத ஒரு பயிர் :
(1) கொக்கோ (2) கறுவா (3) ஏலம் (4) கோதுமை

16. படத்தில் நிறம் தீட்டப்பட்டுள்ள பகுதியில் நன்கு செய்கைபண்ணக்கூடிய பயிர் :
(1) தென்னை (2) தேயிலை (3) நெல் (4) பருத்தி

17. படத்தில் நிறம் தீட்டப்பட்டிருக்கும் பகுதியில் நன்கு செய்கைபண்ணப்படும் பயிர் :
(1) நெல் (2) றப்பர் (3) தென்னை (4) தேயிலை


16-ம் வினுவுக்குரிய படம்


17-ம் வினுவுக்குரிய படம்

பகுதி: 2

எல்லா வினுக்களுக்கும் விடை தருக.

1. (i) நெற் செய்கைக்கு உகந்த நிலைமைகள் யாவை?
(ii) நெற் செய்கையில் கடைப்பிடிக்கப்பட்ட புராதன முறைகள் எவை?
(iii) நெற் செய்கையில் கடைப்பிடிக்கப்படும் நவீன முறைகள் எவை?
(iv) நெற் செய்கை விருத்திக்கு அரசாங்கம் எவ்வாறு உதவுகிறது.
2. (i) சேனைப் பயிர்ச் செய்கை என்றால் என்ன? (ii) அதிலுள்ள குறைபாடுகள் யாவை?
3. இலங்கையின் தேயிலைச் செய்கை குறித்து நான்கு வாக்கியங்கள் எழுதுக.
4. (i) மீன் பிடித்தலுக்குப் பயன்படுத்தப்படும் கருவிகள் எவை?
(ii) இரு மீன்பிடி முறைகளைச் சுருக்கமாக விபரிக்குக.

வினாத்தாள்: 6 **ஆண்டு: 7**

சமூகக்கல்வி

பகுதி: 1

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பட்டிருக்கும் விடைகளுள் சரியானது அல்லது மிகவும் பொருத்தமானது என நீர் கருதும் விடையின் கீழ்க் கோடிடுக.

1. இலங்கையில் குடியேறிய ஆரியர் :
(1) தென்னிந்தியாவிலிருந்து (2) தாய்லாந்திலிருந்து
(3) வட இந்தியாவிலிருந்து (4) மலையாளதேசத்திலிருந்து வந்தனர்.

2. ஆரியர்கள் தங்கள் குடியிருப்புகளை,
(1) கடற்கரைகளில் (2) நதிக்கரைகளில்
(3) குளக்கரைகளில் (4) மலைநாட்டில் அமைத்துக் கொண்டனர்

3. இலங்கையின் தென் பிரதேசத்தில் குடியேறிய ஆரியரது மாகம நகரம் :
(1) களனி கங்கை (2) ஜின் கங்கை (3) வளவை கங்கை (4) கிரிந்தி ஓயா
அருகாமையில் காணப்பட்டது.

4. இலங்கையில் பயிர்ச் செய்கையை முதன் முதல் புகுத்தியவர்கள் :
(1) திராவிடர் (2) நாகர் (3) ஆரியர் (4) இயக்கர்

5. மல்வத்து ஓயாவிற்கு அண்மையில் அமைந்திருக்கும் பண்டைய தலைநகரம் :
(1) அநுராதபுரம் (2) பொலநறுவை (3) சிகிரியா (4) மகியங்கனை

6. அநுராதபுரத்தைத் தலைநகரமாக வளர்ச்சியுறச் செய்த முதல் அரசன் :
(1) துட்டகெமுனு (2) பண்டுகாபய (3) தேவநம்பியதீசன் (4) மகாசேனன்

7. பண்டுகாபயன் கட்டுவித்த குளம் :
(1) நுவரவாவி (2) அபயவாவி (3) மின்னேரியாவாவி (4) காலவாவி

8. அநுராதபுரத்தை ஆண்ட தமிழ் மன்னனிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றிய சிங்கள அரசன்
(1) மகாசேனன் (2) துட்டகெமுனு (3) காசியப்பன் (4) பண்டுகாபயன்

9. சிங்கள அரசர்கள் குளத்தைக் கட்டுவித்து நீரைத் தேக்கியதன் காரணம் :
(1) குடிநீருக்காக (2) நெற் செய்கைக்காக
(3) விலங்குகள் நீர் அருந்துவதற்காக (4) வெள்ளப் பெருக்கு ஏற்படாமல் இருப்பதற்காக

10. எலஹரக் கால்வாயை வெட்டுவித்த மன்னன் :
(1) துட்டகெமுனு (2) தாதுசேனன் (3) அபயன் (4) வசபன்

11. மகாசேனன் கட்டுவித்த குளம் :
(1) மின்னேரியாவாவி (2) கந்தளாய்க் குளம் (3) அபயவாவி (4) நுவரவாவி

12. கலா வாவியிலிருந்து அநுராதபுரத்திற்கு நீரைக் கொண்டு செல்வதற்காக அமைக்கப்பட்ட கால்வாய் :
(1) ஜயகங்கை (2) களனிகங்கை (3) எலஹர (4) ஜின்கங்கை

13. பண்டைய இலங்கை மக்களது ஆடை :
(1) பட்டினால் (2) பருத்தியினால் (3) கம்பளியால் (4) தோலினால் ஆனது

14. பண்டைய இலங்கை மக்கள் தங்களுக்குத் தேவையான பொருட்கள் யாவற்றையும் :
(1) காடுகளில் இருந்து (2) தத்தம் கிராமங்களில் இருந்து
(3) நகரங்களிலிருந்து (4) கடைகளிலிருந்து பெற்றனர்

15. 'பண்டைய இலங்கையின் பிரதான துறைமுகங்கள் :
(1) கொழும்பு, காலி (2) திருகோணமலை, காங்கேசன்துறை
(3) மாதோட்டம், கோகர்ண (4) ஊர்காவற்றுறை, நாவாந்துறை

16. இலங்கையிலிருந்து பிற நாடுகளுக்கு அனுப்பப்பட்ட வியாபாரப் பொருட்கள் :
(1) தங்கம், வெள்ளி, முத்து, மாணிக்கம் (2) யானை, மணிகள், குதிரைகள், முத்து
(3) முத்து, மாணிக்கம், யானைத்தந்தம், யானை (4) தேயிலை, இறப்பர், கொக்கோ

17. புத்தமதம் முதன் முதல் இலங்கையில் பரவியபோது அநுராதபுரத்தை ஆண்ட மன்னன் :
(1) மகாசேனன் (2) வலகம்பாகு (3) தாதுசேனன் (4) தேவநம்பியதீசன்

18. புத்த தர்மத்தை இலங்கைக்குக் கொண்டு வந்தவன் :
(1) அசோகன் (2) மகிந்தன் (3) எல்லாளன் (4) துட்டகெமுனு

19. லோவமகாபாயா, ருவன்வலிசய என்பவற்றைக் கட்டிய மன்னன் :
(1) தாதுசேனன் (2) வசபன் (3) தேவநம்பியதீசன் (4) துட்டகெமுனு

20. சிகிரிய மலைச் சிகரத்தில் ஒரு புதிய அரண்மனையைக் கட்டுவித்த மன்னன் :
(1) காசியப்பன் (2) மொகலாயன் (3) தாதுசேனன் (4) மகாசேனன்

21. அனுராதபுரத்தைக் கைப்பற்றிய அந்நிய நாட்டவர் :
(1) போர்த்துக்கேயர் (2) சோழர் (3) பாண்டியர் (4) ஒல்லாந்தர்

22. பொலநறுவையைத் தலைநகராகக் கொண்டு இலங்கையை ஆண்டவர் :
(1) சோழர் (2) பல்லவர் (3) பாண்டியர் (4) சேரர்

23. சோழரிடமிருந்து பொலநறுவையைக் கைப்பற்றிய மன்னன் :
(1) வலகம்பாகு (2) பராக்கிரமபாகு (3) நிசங்கமல்லன் (4) விஜயபாகு

24. பராக்கிரம சமுத்திரத்தைக் கட்டிய மன்னன் :
(1) பராக்கிரமபாகு (2) விஜயபாகு (3) ஆறும் பராக்கிரமபாகு (4) மகாசேனன்

25. சைவ ஆலயங்களின் சிதைவுகளை :
(1) அனுராதபுரியில் (2) பொலநறுவையில்
(3) தம்பலகாமத்தில் (4) கம்பளையில் காணலாம்

26. பொலநறுவைக்குப் பின்னர் இலங்கையின் தலைநகராக :
(1) தம்பதேனியா (2) சீத்தாவாக்கை (3) கம்பளை (4) கண்டி

27. தம்பதேனியாவுக்குப் பின்னர் தலைநகர் :
(1) சிகிரியா (2) கோட்டை (3) யாப்பஹுவ (4) பொலநறுவை

28. இலங்கையின் தலைநகராக விளங்கியவை :
(1) குருநாகல், கம்பளை, டெடிகம, றைகம
(2) குருநாகல், காலி, அம்பாந்தோட்டை, றைகம
(3) திருகோணமலை, குருநாகல், யாழ்ப்பாணம், அநுராதபுரம்
(4) கம்பளை, வதுளை, கொழும்பு, கண்டி

29. கோட்டை நகரத்தைத் தலைநகராக்கியவன் :
(1) ஆறும் பாரக்கிரமபாகு (2) இரண்டாம் பராக்கிரமபாகு
(3) இராசசிங்கன் (4) மாயாதுன்னை

30. ஆரியச் சக்கரவர்த்தி ஆண்ட இராச்சியம்:
(1) பொலநறுவை (2) கண்டி இராச்சியம்
(3) யாழ்ப்பாண இராச்சியம் (4) கோட்டை இராச்சியம்

31. போர்த்துக்கேயர் முதன் முதல் இலங்கைக்கு வந்தது;
(1) 1594 (2) 1505 (3) 1658 (4) 1515

32. போர்த்துக்கேயர் கோட்டையைக் கைப்பற்றியதும் முதலாம் ராஜசிங்கன்;
(1) கண்டியை (2) சீத்தாவாக்கையை (3) கம்பளையை
(4) யாழ்ப்பாணத்தைத் தனது இராச்சியம் ஆக்கிக்கொண்டான்.

33. முதலாம் ராஜசிங்கன் முல்லேரியாப் போரில் தோற்கடித்த அந்நியர்:
(1) ஒல்லாந்தர் (2) போத்துக்கேயர் (3) ஆங்கிலேயர் (4) சோழர்

34. போர்த்துக்கேயரினால் இறுதிவரை கைப்பற்ற முடியாத இராச்சியம்:
(1) யாழ்ப்பாணம் (2) வன்னி (3) கண்டி (4) கம்பளை

35. இரண்டாம் ராஜசிங்கன் இலங்கையிலிருந்து போர்த்துக்கேயரைத்:
(1) ஆங்கிலேயரின் (2) ஸ்பானியரின் (3) ஒல்லாந்தரின்
(4) பிரான்சியரின், துணையுடன் துரத்தினான்.

36. கண்டி மன்னனான கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன்:
(1) திராவிடர் (2) ஆரியர் (3) நாயக்கர் (4) சோழர் வம்சத்தைச் சேர்ந்தவன்.

37. இன்று இலங்கையில் வாழும் பறங்கியர்:
(1) போர்த்துக்கேயர் (2) ஆங்கிலேயர் (3) ஒல்லாந்தர்
(4) அராபியர், சந்ததியினராவர்:

38. புரட்டஸ்தாந்து சமயத்தை இலங்கையில் பரப்பியவர்:
(1) ஒல்லாந்தர் (2) போர்த்துக்கேயர் (3) இந்தியர் (4) ஆங்கிலேயர்

39. 1796-ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்த அந்நியர்:
(1) ஒல்லாந்தர் (2) ஆங்கிலேயர் (3) இந்தியர் (4) அராபியர்

40. ஆங்கிலேயர், கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றிச் சிறைப்பிடித்த அரசன்:
(1) இரண்டாம் ராசசிங்கன் (2) ஸ்ரீ விக்கிரம ராசசிங்கன்
(3) விமலதர்மசூரியன் (4) முதலாம் ராசசிங்கன்

பகுதி: 2

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1. இலங்கையை ஆண்ட மன்னர்களின் பெயர்களும், அவர்கள் புரிந்த தனித்துவமான செயல்களும் கீழே ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு மன்னரும், ஆற்றிய செயலை ஒழுங்கு படுத்தி எழுதுக.

(அ)	(ஆ)
(i) துட்டகெமுனு	(அ) குளங்கள் பலவற்றைக் கட்டியவன்.
(ii) மகாசேனன்	(ஆ) அழியாத சுவர் ஓவியங்களை வரைவித்தான்.
(iii) கீர்த்தி ஸ்ரீ மேவன்	(இ) வெளிநாட்டு யுத்தம் நடத்தியவன்.
(iv) காசியப்பன்	(ஈ) இலங்கை முழுவதையும் ஒரே அரசாக ஆண்டவன்.
(v) மகாபராக்கிரமபாகு	(உ) புத்ததந்ததாதுவை இலங்கைக்கு வரவழைத்தவன்.

25 இலங்கையின் தேசிய வீரர்கள் என எவர்களைக் குறிப்பிடலாம்?

26 (i) பௌத்த மதம் எம்மன்னனின் காலத்தில் இலங்கைக்கு வந்தது?
(ii) துட்டகெமுனுவின் சிறு வயது ஆசை யாது?
(iii) வசபனும், மகாசேனனும் இலங்கைச் சரித்திரத்தில் எதனல் புகழ் பெற்றனர்?
(iv) காசியப்பனுக்குரிய அவப்பெயர் யாது?
(v) எம் மன்னனுடைய காலத்தில் புத்த தந்தத்தாது இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டது?
(vi) வெளிநாட்டு யுத்தங்களில் ஈடுபட்ட மன்னர் யார்?
(vii) இலங்கையின் பண்டைய தலைநகரங்கள் எவை?
(viii) எம் மன்னனுக்குப் பின் சிங்கள இராச்சியம் வீழ்ச்சியுறத் தொடங்கியது?
(ix) இலங்கையை ஆண்ட ஐரோப்பியர் யாவர்?
(x) ஐரோப்பியர் நமது நாட்டை ஆண்டதால், நமக்கு ஏற்பட்ட பலாபலன்கள் எவை?

வினுத்தாள்: 7 **ஆண்டு: 7**

சமூகக்கல்வி

பகுதி: 1

பின்வரும் வினுக்கள் ஒவ்வொன்றுக்கும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பட்டிருக்கும் விடைகளுள் சரியானது அல்லது மிகவும் பொருத்தமானது என நீர் கருதும் விடையின் கீழ்க் கோடிடுக.

1. 1947-ம் ஆண்டு அமைக்கப்பட்ட பாராளுமன்றத்தின் முதல் பிரதம மந்திரியான இலங்கையர்:
(1) சோல்பரிபிரபு (2) சேர் ஒலிவர் குணத்திலகா
(3) கோபல்லாவ (4) டி. எஸ். சேனநாயக்கா

2. இலங்கை குடியரசான ஆண்டு:
(1) 1972 (2) 1948 (3) 1973 (4) 1945

3. இலங்கைக் குடியரசின் முதல் பிரதம மந்திரி:
(1) எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா (2) டட்லி சேனநாயக்கா
(3) தகநாயக்கா (4) சிறிமாவோ பண்டாரநாயக்கா

4. பண்டைக் காலத்தில் யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரமாக விளங்கியது;
(1) நல்லூர் (2) மாவிட்டபுரம் (3) மாதகல் (4) கந்தரோடை

5. யாழ்ப்பாணத்திலுள்ள கோட்டை யாருடைய ஆட்சியின் சான்றுக விளங்குகிறது:
(1) போத்துக்கேயர் (2) ஒல்லாந்தர் (3) ஆங்கிலேயர் (4) சோழர்

6. கந்தரோடையில் கண்டுபிடிக்கப்பட்ட சில புதை பொருள் சின்னங்கள் தொடர்புடைய சமயம்:
(1) பௌத்தம் (2) இந்து (3) இஸ்லாம் (4) கிறிஸ்தவம்

7. அந்நிய ஆட்சிக்கு எதிராகப் போரிட்ட யாழ்ப்பாணத்து வீர அரசன்:
(1) ஆரியச் சக்கரவர்த்தி (2) 1-ம் விமலதர்மசூரியன்
(3) சங்கிலி (4) 1-ம் இராஜசிங்கன்

8. பின் வருவனவற்றுள் நிர்வாக திருவாகப் பிரிவுகளைக் காட்டுவது :
(1) மாகாணம், தேர்தல் தொகுதி, மாவட்டம்
(2) மாவட்டம், இறைவரிப் பகுதி, கிராமசேவகர் பிரிவு
(3) மாகாணம், மாவட்டம், கிராமம்
(4) ஈரவலயம், வரண்ட வலயம், அதிவறள்வலயம்

9. கச்சேரி என்று அழைக்கப்படுவது :
(1) பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் அலுவலகம் (2) கிராமசேவகர் அலுவலகம்
(3) அரசாங்க அதிபர் அலுவலகம் (4) சுகாதார அதிகாரி அலுவலகம்

10. "கன்சபா" என்பது பழைய உள்ளூராட்சி மன்றமாகும். அதனை இன்று :
(1) நகரசபை (2) பட்டினசபை (3) மாநகரசபை (4) கிராமோதயசபை என்பர்.

11. நகரபிதா என்பவர் :
(1) கிராமோதயசபைத் தலைவர் (2) பிரதேசசபைத் தலைவர்
(3) பட்டினசபைத் தலைவர் (4) மாநகரசபைத் தலைவர்

12. இலங்கையில் வாழ்கின்ற பல இன மக்களில் அதிகமானோர் :
(1) தமிழர் (2) சிங்களவர் (3) இஸ்லாமியர் (4) பறங்கியர் ஆவர்

13. இலங்கை மக்களில் சிங்கள மக்களின் வீதம் :
(1) 20% (2) 10% (3) 71% (4) 69%

14. சிங்கள மக்களின் மூதாதையர் :
(1) ஆரியர் (2) திராவிடர் (3) நாகர் (4) இயக்கர்

15. வட இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து குடியேறிய மக்களிலிருந்து தோன்றிய இனம் :
(1) தமிழர் (2) சோனகர் (3) சிங்களவர் (4) இயக்கர்

16. மிகப் பண்டைக் காலத்தில் தென்னிந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்து குடியேறிய இனம் :
(1) சிங்களவர் (2) சோனகர் (3) தமிழர் (4) வேடர்

17. இலங்கையில் வாழ்கின்ற இந்தியத் தமிழர்கள் இங்கு குடியேற்றப்பட்டதன் காரணம் :
(1) சனத்தொகை அதிகரிப்பதற்காக
(2) தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்விப்பதற்காக
(3) தொழிற்சாலைகளில் வேலை செய்விப்பதற்காக
(4) நெல் வயல்களில் வேலை செய்விப்பதற்காக

18. இலங்கையில் தமிழர் பெருந் தொகையாக வாழும் பகுதி :
(1) தென் மாகாணம் (2) மத்திய மாகாணம்
(3) வட மாகாணம் (4) கிழ் மாகாணம்

19. இலங்கை மக்களின் சனத் தொகையில் தமிழ் மக்களின் வீதம் :
(1) 71% (2) 10% (3) 60% (4) 21%

20. இலங்கையில் வேடர் வாழ்கிற பிரதேசம் :
(1) ஊவா மாகாணம் (2) மட்டக்களப்பு (3) கதிர்காமம் (4) மத்திய மாகாணம்

21. அராபிய நாட்டில் இருந்து வியாபாரத்துக்காக இலங்கையில் வந்து குடியேறியவர்கள் :
(1) போத்துக்கேயர் (2) ஒல்லாந்தர் (3) சோனகர் (4) சிங்களவர்

22. ஒல்லாந்தரின் சந்ததியினராக இலங்கையில் வாழ்வோர் :
(1) மலாயர் (2) பறங்கியர் (3) முஸ்லிம்கள் (4) வேடர்

23. சிங்கள மக்களது சமயம் :
(1) இந்துமதம் (2) இஸ்லாமியமதம்
(3) பௌத்தமதம் (4) கிறிஸ்தவமதம்

24. பின்வரும் வரைப்படம் எந்த நாட்டின் தேசியக்கொடி :
(1) சீன (2) இந்தியா
